புதுவை அரசு
காவல் துறை

நெ.சி/192/2007

தேதி 04.02.2016

## ஏல அறிவிப்பு

1. புதுவை அரசு காவல் துறைக்குச் சொந்தமான பயன்படுத்த முடியாத பர்னிச்சர் பொருட்கள், இரும்பு பொருட்கள், எவர்சில்வர் மற்றும் அலுமினிய சமையல் பாத்திரங்கள், பயன்படுத்தமுடியாத மிகப்பழைய கணினி மற்றும் பிரிண்டர்கள், மின்சாதன பொருட்கள், பேட்டரிகள், பழைய ஆடை, காலணி மற்றும் தட்டுமுட்டு பொருட்கள் அனைத்தும் கோரிமேடு காவல்துறை வளாகத்தில் அமைந்துள்ள தலைமை கிடங்கில் **2016-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ந் தேதி** முற்பகல் **11.00 மணிக்கு** வாய்மொழி ஏலத்தில் விடப்படும்.

2. ஏலத்தில் பங்கு பெறும் ஏலதாரர்கள் ரூபாய் 800/- (ரூபாய் எண்ணூறு ரூபாய் மட்டும்) பிணை வைப்புத் தொகையை (EMD) காவல் கண்காணிப்பாளர் (தலைமையகம்), புதுச்சேரி என்ற பெயரில் குறுக்கே கோடிட்ட கேட்பு வரைவோலை (Demand Draft) செலுத்தி தலைமை கிடங்கில் அதற்கான தற்காலிக ரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.

3. வாய்மொழி ஏலத்தில் ஒவ்வொரு வகையான பொருள்களை எந்த ஏலதாரர் அதிகப்படியான தொகைக்கு கேட்கிறாரோ அவருக்கே இறுதி செய்யப்படும்.

4. வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு பிணை வைப்புத் தொகையை ஏலம் முடிந்தவுடன் திருப்பித் தரப்படும்.

5. அனைத்து அல்லது ஏதேனும் ஏலத்தொகையை யாதொரு காரணமும் இன்றி நிராகரிக்க காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு உரிமை உண்டு.

6. ஏலம் முடிந்தவுடன் தகுதியான ஏலதாரர்(கள்) ஏலம் எடுத்த முழுத்தொகையை உடனே செலுத்த வேண்டும். செலுத்த தவறினால் அவர் கட்டிய பிணை வைப்புத் தொகையை இழக்க நேரிடும்.

7. ஏலம் எடுத்த பொருட்களை ஏலதாரர் அவரது சொந்த செலவில் - பொறுப்பில் 24 மணி நேரத்திற்குள் மேற்சொன்ன கட்டிடத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். ஏலம் எடுத்தவுடன் ஏலப் பொருட்களை தங்கள் பாதுகாப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். பொருட்கள் தவறினால் இத்துறை பொறுப்பேற்காது.

8. ஏலம் எடுக்க விரும்புவோர் ஏலம் விடவிருக்கும் பொருட்களை அலுவலக நேரத்தில் கோரிமேடு காவல் துறை வளாகத்தில் அமைந்துள்ள தலைமை கிடங்கில் பார்வையிடலாம்.

9. ஏலத்தில் கடைசியாக விடப்பட்ட ஏலத்தொகைக்கு விதிமுறைகளுக்கேற்ப விற்பனை வரி வசூலிக்கப்படும்.

10. இது சம்மந்தமாக காவல் துறை காவல் கண்காணிப்பாளர் (தலைமையகம்) அவர்களின் முடிவே இறுதியானது.

I. R. 4.2.16

காவல் கண்காணிப்பாளர் (தலைமையகம்)
புதுவை

பெறுநர்
இயக்குனர்
அரசு அச்சகம்
புதுச்சேரி
} அடுத்து வெளியிடப்படும் தமிழ் மற்றும் ஆங்கில கெசட்டில் ஏலம் விடுவதற்கு முன்பாக பிரசுரம் செய்யவும் மற்றும 25 நகல்கள் தரக்கோரி

நகல்
அனைத்து அரசுத்துறை
தலைமை அலுவலக அதிகாரிகள்
புதுச்சேரி அரசு
} சம்பந்தப்பட்ட அலுவலகத்தின அறிவிப்பு பலகையில் பார்வைக்காக வைக்கவேண்டி

இணையதள அதிகாரி.
புதுச்சேரி காவல்துறை
} இணைய தளத்தில் பதிவு செய்ய வேண்டி